# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## பகுதி II

31

பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு எந்தத் தொகுதியிலும் வெற்றியீட்டாத திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை, சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் செனட் சபைக்கு, நியமன உறுப்பினராக்கி, அதன் பின் பிரதமராகத் தெரிவு செய்தனர். இந்த விடயத்தில் பாராளுமன்ற சம்பிரதாயங்கள் அனைத்தும் புறக்கணிக்கப் பட்டுவிட்டதாக எதிர்க் கட்சியினர் கூக்குரலிட்டபோதிலும், உலகின் 'முதலாவது பெண் பிரதமர்' என்ற பாராட்டுகளுக்குள் அந்த எதிர்ப்புக் குரல் அடங்கி ஒடுங்கிப்போய்விட்டது.

பிரான்ஸ் போன்ற வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளிலேயே, பெண்களுக்கு அரசியலில் சமத்துவம் வழங்கப் படாத காலகட்டத்தில் இலங்கை மக்கள் ஒரு பெண்ணை பிரதமராகத் தெரிவுசெய்துள்ளது, முற்போக்கான நடவடிக்கை என்று அப்போதைய மேற்குலக அரசியல் விமர்சகர்களும், செய்தியாளர்களும் பாராட்டியிருந்தார்கள்.

உண்மையில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் தெரிவானது, வாரிசுரிமை அடிப்படையில் நடந்ததேயன்றி, பெண்களுக்கு அரசியல் சமத்துவம் வழங்குவது என்ற முற்போக்கான படிமுறை வளர்ச்சிக்கூடாக நடைபெறவில்லை. அவர் பிரதமராகப் பதவியேற்ற 1960-ம் ஆண்டு காலகட்டத்தில், சிங்களப் பெண்கள் மிக மோசமான ஆண் அடிமைத்தனத்துக்கு உள்ளாக்கப் பட்டிருந்தார்கள். கிராமப்புறப் பெண்கள் எழுத்தறிவற்றவர்களாகவும், அதிகளவுக்கு ஆண்களின் பாலியல் வன்முறைக்கு முகங்கொடுக்க வேண்டியவர்களாக இருந்தார்கள்.

இந்த நிலையில் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இருந்த கண்டிய உயர் சாதியினரான பௌத்த சிங்கள தேசியவாதிகள் 'ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள்' என்கின்ற கணக்கில் S.W.R.D. பண்டாரநாயக்காவின் வாரிசுரிமையும், அதன் மூலம் தங்களது கண்டிய சிங்கள 'கொயிகம' சாதியின் ஆளுமையையும் நிலை நிறுத்திக் கொண்டதுடன், தமிழர்கள், மற்றும் மலையாளருக்கு எதிரான படுபிற்போக்குத்தனமான இனவாதம், இந்துக்கள் - கிறிஸ்தவர்கள் - இஸ்லாமியர்களுக்கு எதிரான மட்டரகமான பௌத்த மதவெறி என்பவற்றை, பெண்ணுக்கு முன்னுரிமை கொடுத்த நாடு, கட்சி என்கிற சர்வதேச அபிப்பிராயத்தை உருவாக்கிய தன் மூலம் மூடி மறைத்துக் கொண்டனர்.

பிரதமராக பதவி ஏற்றுக் கொண்ட திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு ஆட்சியை திறம்பட நடத்துவது அவ்வளவு சுலபமானதாக இருக்கவில்லை. அவர் பிரதமராகப் பதவியேற்ற காலத்தில் நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிக்கொண்டிருந்தது. அரிசி மானியத்தின் ஒரு பகுதியை இல்லாமல் செய்வதற்கு அவர் பாராளுமன்றத்தில் கொண்டுவர உத்தேசித்த முதலாவது பிரேரணை அவரது கட்சி உறுப்பினர்களின் எதிர்ப்பைச் சம்பாதித்ததால் கைவிடப் பட்டது. இதனால் இந்தப் பிரேரணையைத் தயாரித்த நிதி அமைச்சர் பீலிக்ஸ் டயஸ்- பண்டாரநாயக்கா, பிரித்தானிய பாராளுமன்ற மரபுப்படி தனது பதவியை இராஜினாமாச் செய்து கொண்டார்.

S.W.R.D. பண்டாரநாயக்காவின் 'சிங்களம் மட்டும்' சட்டத்தால் உருவான மொழிப் பிரச்சினை, திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை அச்சுறுத்தும் இன்னொரு பிரதான அரசியல் காரணியாக இருந்தது.

பேரம்பேசும் அரசியல் மூலம், மொழிப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் கண்டுவிடலாம் என்று இலவுகாத்த கிளிகளாகக் காத்திருந்த தமிழரசுக்கட்சியினர், ஸ்ரீமாவோவின் அரசியல் பிரவேசத்தாலும் அவரைச் சுற்றி உருவாக்கப்பட்ட ஒளிவட்டத்தாலும் அது இனி சாத்தியம் இல்லை என்ற நிலையில், வடக்கு கிழக்கில் சத்தியாக்கிரகப் போராட்டத்தை- ஆரம்பிக்கப் போவதாக அறிவித்தனர்.

> **ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் தெரிவானது, வாரிசுரிமை அடிப்படையில் நடந்ததேயன்றி, பெண்களுக்கு அரசியல் சமத்துவம் வழங்குவது என்ற முற்போக்கான படிமுறை வளர்ச்சிக்கூடாக நடைபெறவில்லை. அவர் பிரதமராகப் பதவியேற்ற 1960-ம் ஆண்டு காலகட்டத்தில், சிங்களப் பெண்கள் மிக மோசமான ஆண் அடிமைத்தனத்துக்கு உள்ளாக்கப் பட்டிருந்தார்கள். கிராமப்புறப் பெண்கள் எழுத்தறிவற்றவர்களாகவும், அதிகளவுக்கு ஆண்களின் பாலியல் வன்முறைக்கு முகங்கொடுக்க வேண்டியவர்களாக இருந்தார்கள்.**

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவைப் பொறுத்தவரை அவருக்கு இந்த மொழிப் பிரச்சினை பற்றி ஒன்றுமே தெரியாது. 'சிங்கள பௌத்தர்களுக்குச் சொந்தமான நாட்டில் - சிங்கள மொழி தானே ஆட்சி மொழியாக இருக்க வேண்டும்' என்ற சாதாரண கண்டிய சிங்கள மேட்டுக்குடி பெண்களுக்கு இருக்கக் கூடிய எண்ணமே அப்போது அவரிடம் இருந்தது. தமிழரசுக் கட்சியினர் தமிழ் மொழிக்கு சம உரிமை கோருவது, ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு விடயம் என்று அவர் நினைத்தார்.



# உலகின் முதலாவது பெண் பிரதமராக ஸ்ரீமாவோ 1961-ல் நடந்த மாபெரும் உரிமைப் போர்

இந்த நிலையில் 1961-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் தாங்கள் முன்கூட்டியே அறிவித்தபடி, தமிழரசுக் கட்சியினர் முதலில் யாழ்ப்பாணச் செயலகம் முன்பாக சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்தனர். பின்னர் வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களுக்கும் அதை விரிவுபடுத்தினர். தமிழுக்கு உரிமை கோரி நடத்தப்பட்ட இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் உணர்வுபூர்வமாகப் பங்கெடுத்துக்கொண்டனர். தமிழீழத்தின் பட்டிதொட்டி எங்கும் இந்தப் போராட்டத்தின் தாக்கம் எதிரொலித்தது.

பல வாரங்கள் நீடித்த இந்தச் சத்தியாக்கிரகத்தை ஸ்ரீமாவோ அரசு அவசரகாலச் சட்டத்தைப் பிரயோகித்து, இராணுவத்தையும், கடற்படையையும் பயன்படுத்தி அடக்கியது.

சத்தியாக்கிரகம் நடைபெற்ற பகுதிகளுக்கு அனுப்பப்பட்ட இராணுவத்தினரும், கடற்படையினரும், சத்தியாக்கிரகம் இரு-ந்த தமிழரசுக் கட்சித் தலைவர்களை மட்டுமல்லாமல் மக்களையும் துப்பாக்கிப் பிடிகளால் அடித்தும், பூட்ஸ் கால்களால் மிதித்தும், உதைத்தும் படுகாயப் படுத்தினர்.

இறுதியில் எஸ்.ஜேவி செல்வநாயகம், வன்னியசிங்கம், அ.அமிர்தலிங்கம், நாகநாதன் உட்பட சத்தியாக்கிரகம் இருந்த அனைத்து தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டனர். 1961 ஏப்ரல் மாதம் கைது செய்யப் பட்டு, 'தனியான இராச்சியம் ஒன்றை அமைக்க சட்டபூர்வமான அமைப்புக்கு எதிராகச் செயற்பட்டனர்' என்று கூறிச் சிறைவைக்கப்பட்ட அவர்கள், 1961 ஒக்டோபர் மாதத்திலேயே விடுதலை செய்யப்பட்டனர்.

தமிழரசுக் கட்சியினர் சத்தியாக்கிரகம் இருந்த காலகட்டத்திலேயே அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்தினர். அரசாங்கத்தின் சார்பில் அப்போது நிதி அமைச்சராக இருந்த சாம் பி.சி. பெர்னாண்டோவும், தமிழரசுக் கட்சியின் சார்பில் எஸ். ஜே.வி.செல்வநாயகமும் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர். இறுதியில் பெர்னாண்டோ - செல்வநாயகம் ஒப்பந்தம் உருவாகியது.

> **1961-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் தாங்கள் முன்கூட்டியே அறிவித்தபடி, தமிழரசுக் கட்சியினர் முதலில் யாழ்ப்பாணச் செயலகம் முன்பாக சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்தனர். பின்னர் வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களுக்கும் அதை விரிவுபடுத்தினர். தமிழுக்கு உரிமை கோரி நடத்தப்பட்ட இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் உணர்வுபூர்வமாகப் பங்கெடுத்துக்கொண்டனர்.**

இறுதியில் பண்டா - செல்வா ஒப்பந்தத்தைப் போலவே அதுவும் கிழித்துக் குப்பைக் கூடைக்குள் போடப்பட்டது. பொதுவாக 1961-ல் தமிழரசுக் கட்சியினர் நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டம், தமிழ் மக்களுடைய சக்தியையும் எழுச்சியையும் வீணடித்த ஒரு போராட்டம் என்றே அரசியல் வரலாற்றாசிரியர்களால் விமர்சிக்கப் படுகிறது.

அரசு, வன்முறையைப் பிரயோகித்தால், அதை எதிர்கொள்ளக்கூடிய மாற்றுத்திட்டம் எதுவும் தமிழரசுக் கட்சித் தலைவர்களிடம் இருக்கவில்லை.

இப்போராட்டம் தோல்வியில் முடிந்ததற்கு மு.திருநாவுக்கரசு 'இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படைகள்' என்ற தனது நூலில் இரண்டு காரணங்களைக் குறிப்பிடுகின்றார்.

முதலாவது, வடக்கு கிழக்கில் நடத்தப்படுகிற கடையடைப்பு, பகிஸ்கரிப்பு போன்ற போராட்டங்கள், தென்னிலங்கையின் பொருளாதாரத்தைப் பாதிக்க முடியாதவையாகும். மலையக மக்கள் ஒரு கிழமை பகிஸ்கரிப்பில் ஈடுபட்டால் இலங்கை அரசின் தேசிய வருமானம் பெரிய அளவில் பாதிக்கப்படும். அதற்கு இலங்கை அரசும் அஞ்சும். ஆனால் வடக்கு கிழக்கில் பெரும் கைத்தொழில் சாலைகளோ, அல்லது தென்னிலங்கையின் பொருளாதார ஓட்டத்துக்கு விநியோகம் செய்யக்கூடிய ஏதாவது பொருளாதார அம்சமோ இல்லாத காரணத்தினால் மேற்குறிப்பிட்ட வகைப் போராட்டங்கள் எதுவும் பொருளாதார அர்த்தத்தில் இலங்கை அரசைப் பாதிக்கவில்லை. இரண்டாவதாக அரசியல் அர்த்தத்தில் இப்போராட்டங்களின் பாதிப்பை எடுத்துப் பார்த்தால் தமிழ் தலைவர்கள் மேற்கொண்ட இந்தப் போராட்டங்கள் அவற்றிற்குரிய உச்சக் கட்டத்தை எட்டவில்லை.

எந்தத் தமிழ் தலைவரும் அகிம்சை வழியில் பெரும் தியாகங்களைச் செய்யத் தயாராக இருக்கவில்லை. அக்காலத் தமிழ் தலைவர்கள் போராட்டத்தை 'அதற்குரிய முழுவடிவத்தில்' முன்னெடுக்கவில்லை. அரைகுறையாகச் செய்து அதை அப்படியே கைவிட்டனர். போராட்டத்தின் அடுத்த கட்டம் என்ன என்பதைப் பற்றிய முடிவோ அல்லது தொடர் போராட்டம் பற்றிய திட்டங்களோ அவர்களிடம் இருக்கவில்லை......

.....அக்காலத் தலைவர்களின் பொருளாதார நலன்கள் வடக்கு கிழக்குக்கு வெளியே கொழும்பில் மையங் கொண்டிருந்தன. அவர்களது முதலீடுகளும், வீடுவாசல்களும் பிரதானமான தொழில் வாய்ப்புக்களும் (வக்கீல் தொழில்) கொழும்பை நோக்கியே அநேகமாக இருந்தன. எனவே அவர்கள் கொழும்பு நலன்களை இழந்து தீவிரமாகப் போராடத் தயாராக இருக்கவில்லை.

**- நக்கீரன்**

படிப்பகம்